

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.4.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 2025–2026 ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் சந்தர மோகன், பி., பள்ளிக்கல்வித் துறை சிறப்பு செயலாளர் ச. ஜெயந்தி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் / பொது நூலகத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்ட இயக்குநர் டாக்டர் மா. ஆர்த்தி, தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலர் ஆர். சுதன்,(ஓய்வு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.4.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் 2025–2026 ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.4.2025) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர் ஹர் சஹாய் மீனா, அறிவியல் நகர துணைத் தலைவர் / முதன்மைச் செயலாளர் தேவ் ராஜ் தேவ், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, கல்லூரி கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் ஜெ.இன்னசன்ட் திவ்யா, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் துணை தலைவர் எம்.பி. விஜயகுமார், (ஓய்வு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.4.2025) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் 2025–2026 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.4.2025) தலைமைச் செயலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர் க. அன்பழகன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம் மற்றும் கும்பகோணம் பகுதி நிர்வாகிகள் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் கும்பகோணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.4.2025) தலைமைச் செயலகத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் க. அன்பழகன், துரை சந்திரசேகர், டி.கே.ஜி.நீலமேகம், கா. அண்ணாதுரை ஆகியோர் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் கும்பகோணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் உள்ளார்.

### நெய்வேலி நிலக்கரி நிறுவன – தொ.மு.ச.வை

# தனிப் பெரும் சங்கமாக உருவாக்க வாக்களிப்பீர்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை,ஏப்.25-**

**நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் நடைபெற இருக்கின்ற இரகசிய வாக்கெடுப்பில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தை எண்.6-இல் வாக்களித்துத் தனிப் பெரும் சங்கமாக உருவாக்கித் தர வேண்டும் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:**

என்.எல்.சி. உடன்பிறப்புகளே!

நிறுவனத்தில் பணியாற்றும் எனது அன்பு அருமைத் தோழர்களே! இனிய நண்பர்களே! அனைவருக்கும் உங்களில் ஒருவன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் அன்பு வணக்கங்கள்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை என்.எல்.சி. பொதுத்துறை நிறுவனத்தில் நடைபெறுகின்ற சங்க அங்கீகாரத்திற்கான இரகசிய வாக்கெடுப்புத் தேர்தல் நாளை நடைபெற உள்ளது!

ஒன்றிய அரசுகள் என்.எல்.சி. பங்குகளை விற்றுத் தனியார்மயத்தைப் புகுத்த முயற்சித்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக அது தடுக்கப்பட்டு இன்றளவும் இந்தியாவிலேயே அதிக ஊதியம் பெறக்கூடிய தொழிலாளர்கள் பணியாற்றக்கூடிய பொதுத்துறை நிறுவனமாக என்.எல்.சி. நிறுவனம் விளங்குகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்!

கடந்த தேர்தல்களில் பெரும்பான்மையான தொழிலாளர்களின் வாக்குகளோடு நமது தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் முதன்மைச் சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல்வேறு நலப் பணிகளைச் சிறப்பாக ஆற்றி உள்ளதை நீங்கள் அறிவீர்கள்!

குறிப்பாக கொரோனாவால் உயிரிழுந்த குடும்பங்களின் 124 வாரிசுகளுக்கு வேலை பெற்றுக் கொடுத்திருக்கிறோம் !

ஒப்பந்த தொழிலாளர்களாகப் பணியாற்றிய 3154 தொழிலாளர்களை சொசைட்டி தொழிலாளர்களாகவும், சொசைட்டி தொழிலாளர்களாக இருந்த 2173 தோழர்களை நிரந்தரத் தொழிலாளர்களாகவும், டிப்ளமோ மைனிங் முடித்த

180 இளைய தோழர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமனம் செய்ய வைத்திருக்கிறோம்.

உலகம் முழுவதும் நிரந்தரப் பணியாளர்களை ஒப்பந்த தொழிலாளர்களாக மாற்றுகிற தருணத்தில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் தொடர் முயற்சியின் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரமாக்கிய சாதனைகளைப் படைத்ததுதான் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்.

தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு மற்றும் நிலம் கொடுத்தவர்களுக்கு வேலை, சிறந்த பதவி உயர்வு வாய்ப்புகள், பாதுகாப்பான பணிச் சூழல் இவற்றை உறுதி செய்ய வேண்டிய கடமையும் பொறுப்பும் நம்முடைய தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்திற்கு உண்டு!

எனவே 2027-இல் நடைபெற இருக்கின்ற ஊதியமாற்று ஒப்பந்தத்தில் மேற்கண்ட முக்கியக் கோரிக்கைகளை வென்றெடுக்கத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் இந்த இரகசிய வாக்கெடுப்பில் தனிப்பெரும் சங்கமாக வர வேண்டியது காலத்தின் கட்டாயம்!

“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்” - என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப,

கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும், தொழிலாளர் முன்னேற்றச் சங்கமும் ஆற்றி இருக்கக்கூடிய எண்ணில் அடங்கா நலப் பணிகளைக் கருத்தில் கொண்டு 25.04.2025 அன்று நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் நடைபெற இருக்கின்ற இரகசிய வாக்கெடுப்பில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தை எண்.6-இல் வாக்களித்துத் தனிப்பெரும் சங்கமாக உருவாக்கித் தர வேண்டும் என்று உங்களில் ஒருவனான நான் உங்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### குடிமைப் பணி தேர்வுக்கு தயாராகும் 500 மாணவர்கள் தங்கிப் பயில

# செனாய் நகரில் ரூ.40 கோடியில் நவீன பயிற்சி மையம்!

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை,ஏப்.25-**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன் “நான் முதல்வன்” திட்டம் குறித்துப் பாராட்டிப் பேசியதையடுத்து, அகில இந்திய குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பாராட்டு தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

பேரவைத் தலைவர் அவர்களே,

இங்கே எனக்கு முன்பு உறுப்பினர் தம்பி வெற்றி அழகன் அவர்கள் மிக அழகாக, நிதானமாக பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்து உரையாற்றியிருக்கிறார். அவர் பேசுகிறபோது, நான் முதல்வன் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்லி, சில விவரங்களையெல்லாம் தெரிவித்தார்; சில விளக்கங்களைக் கேட்டார். எனவே, அதையொட்டி நான் சில செய்திகளை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மாணவர்களின் திறனை வளர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட திட்டம்தான் ‘நான் முதல்வன்’ திட்டம். அந்தத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளின் விளைவாக, தற்போது வெளியான அகில இந்திய குடிமைப் பணி தேர்வு முடிவுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களின் தேர்ச்சி விகிதம் அதிகரித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஆம் ஆண்டு வரை, ஒவ்வொரு ஆண்டும் அதிகமான தமிழ்நாட்டு மாணவர்கள் குடிமைப் பணி தேர்வுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலை மாறி

2021ல் வெறும் 27 மாணவர்கள் மட்டும்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதை கவனத்தில் வைத்து, நான் முதல்வன் திட்டத்தின்கீழ் பல்வேறு முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டது.

குடிமைப் பணி தேர்வுக்குத் தயாராகக் கூடிய ஆயிரம் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு மாதம் 7500 ரூபாய் வீதம் பத்து மாதங்களுக்கு வழங்கினோம். மேலும், முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வுக்குத் தயாராகக்கூடிய மாணவர்களுக்கு ரொக்கமாக 25 ஆயிரம் ரூபாயை ஊக்கத் தொகையாக வழங்கினோம். அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் ‘அகில இந்திய குடிமைப் பணி தேர்வு மையத்தின்’ மூலமாக இந்த மாணவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன.

நாம் மேற்கொண்ட தீவிரமான முயற்சிகளின் பயனாக, இந்த ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து 57 மாணவர்கள் பல்வேறு அகில இந்தியப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிரு க்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் கூடுதல் மகிழ்ச்சி என்னவென்றால், இவர்களில் 50 பேர் ‘நான் முதல்வன்’ திட்டத்தில் பயிற்சி பெற்றுப் பயனடைந்திருக்கக்கூடியவர்கள் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

‘நான் முதல்வன்’ திட்டத்தின் போற்றத்தக்க இந்த வெற்றியினை நாம் தக்க வைத்துக்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், தேர்வில் வெற்றி பெறுபவர்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்த வேண்டும். அதற்காக சென்னையில் இருக்கக்கூடிய செனாய் நகர் பகுதியில் 500 மாணவர்கள் தங்கிப் பயிலக்கூடிய வகையில், அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய ஒரு பயிற்சி மையம் 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை தங்கள் வாயிலாக இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; இந்த ஆண்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஒரு பாராட்டு விழா நிகழ்ச்சியினை நாளை மறுதினம் அவர்கள் பயிற்சி பெற்ற அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி வளாகத்தில் நடத்திடவும், அதில் நான் கலந்துகொள்ளவும் இருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைக்கோடித் தமிழ் இளைஞர்களின் கனவுகளையும் நனவாக்குவதே இந்த திராவிட மாடல் அரசின் முழுமுதற் கடமை! (மேசையைத் தட்டும் ஒலி) அதனை தொடர்ந்து செய்வோம் என்ற உறுதியினை அளித்து அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.